மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : துணைத் தலைவரவர்களே, ஒரு திட்டத்தை நிறைவேற்றும்போது அங்கே கிடைக்கக்கூடிய பல்வேறு தகவல்களைக் கணக்கிலே கொள்கிறோம். மேலும் கூடுதலாக எந்த அளவுக்கு புன்செய் நிலங்களுக்கு புதிதாக பாசன வசதி கொடுக்க முடியும் என்பதை முக்கியமாக கருத்திற் கொண்டு திட்டங்களைத் தீட்டுகிறோம். இத்திட்டத்தின் மூலம் 4202 ஏக்கர் புன்செய் நிலங்களுக்குப் பாசன வசதி கிடைக்கும்; 846 ஏக்கர் நன்செய் நிலங்கள் பாசன உறுதி பெறும். அந்த வகையில் திட்டத்தை அமைத்திருக்கிறோம். இதற்குமேல் அங்கே பெரிய திட்டம் அமைக்கத் தேவையில்லை என்றும், இருக்கிற நீர் அளவைக் கருதிப்பார்க்கும்போது இதுவே சரியானது என்று கருதுவதாலும் இத் திட்டத்தை நிறைவேற்ற அரசு ஒப்புதலும் அளித்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இராமநாதபுரம் தொகுதியில் சுண்ணாம்பு சிப்பிகள் எடுக்க குத்தகை விடும் திட்டம்.

*வினா எண் 1025—திரு. ரா. கு. பெருமாள் : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம், முதுகுளத்தூர் தொகுதியில் அழகன்குளம், நாகாச்சி, ஆத்தங்கரை போன்ற இடங்களில் சுண்ணாம்பு சிப்பிக்கு டன் 1க்கு ரூ. 9—86 வசூல் செய்யவேண்டும் என்பதை அரசு வட்ட ஆட்சியருக்கு உத்தரவிட்டுள்ளதா?

(ஆ) ஆண்டுக்கு அதன் வருமானம் என்ன?

(இ) குத்தகைதாரருக்கு விடும் உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (அ) இல்லை.

(ஆ) 1980ம் ஆண்டு வருமானம்; உரிம வரி (Royalty) தலவரி (Local Cess) மற்றும் தலவரி மீது உபரிவரி (Local Cess surcharge) உட்பட ரூ. 7 ,578 65 ஆகும்.

(இ) தனியார் நிறுவனங்களுக்கு குத்தகை விடும் உத்தேசம் அரசுக்கு இல்லை. தமிழ்நாடு கனிம நிறுவனம் இராமநாதபுரம் வட்டம், அழகன்குளம், நாகாச்சி, ஆத்தங்கரை கிராமங்களில் சுண்ணாம்பு சிப்பி எடுக்க குத்தகை கோரி மனுச் செய்துள்ளது. அம்மனுவின் பேரில் அரசுக்கு, சென்னை தொழில் மற்றும் வணிக இயக்குநர் 20 வருடக் குத்தகைக்கு சிபாரிசு செய்து உள்ளார். அரசு விதிமுறைகளுக்கிணங்க தமிழ்நாடு கனிம நிறுவனத்தினரின் விண்ணப்பத்தின்பேரில் ஆணை பிறப்பிக்கவிருக்கிறது.